# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

**Under Section 173 BNSS** ~~(Under Section 154 Cr.P.C.)~~ ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081670

1. District மாவட்டம் : திருவாரூர் | PS: காவல்நிலையம் : VBAC | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 01/2024 | Date: நாள் 19/7/2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: (as amended in 2018) | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 26/6/24 சுமார் 11.00 மணி | Date to : நாள் வரை 8/7/24 சுமார் 11.30 மணி

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.7.24 | Time : நேரம் 18.00 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — கிள்ளாம்பூர், VAO அலுவலகம் சுமார் 1.40 கி.மீ வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — கா. மாணிப்பவன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — 1. கல்யாணசுந்தரம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.6.1966 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 15 D, அய்யங்குப்பம் தெரு, கும்பகோணம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. மகேஸ்வரன், கிராம நிர்வாக அலுவலர், கிள்ளாம்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   விசாரணைக்குப்பின் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. மாரியப்பன்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19/7/24

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19/7/2024

Name: பெயர் R. ARUN PRASAD
Rank: நிலை Inspector of police No. எண்
VDAC, Thanjavur

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

தஞ்சாவூர் ஊ.த.க. பிரிவு குற்ற எண். 02/2024-ன் தொடர்ச்சி......

பணிந்து சமர்பிக்கிறேன் :- தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 19.07.2024 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது கும்பகோணம், அப்புக்குட்டி தெரு, 15D என்ற முகவரியை சேர்ந்த கலியபெருமாள் மகன் K.மாரியப்பன் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேற்று 18.07.2024 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் பேரில் உத்தரவுபடி விசாரணைக்கு பின் பதிவு செய்யப்பட்ட வழக்கு விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: K.மாரியப்பன், த/பெ. கலியபெருமாள், 15D, அப்புக்குட்டி தெரு, கும்பகோணம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 8 வருடமாக கும்பகோணம் தாலுக்கா, இன்னம்பூர் கிராமத்தில் ஆர்க் வெல்டிங் கடை சொந்தமாக வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது மனைவி நாகவள்ளிக்கு, அவரது தாயார் ஆசியம்மாள் க/பெ.மணிக்கவாசகம் என்பவருக்கு சொந்தமான கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் இன்னம்பூர் வருவாய் கிராமம் மேலத்தெருவில் உள்ள புல எண். 276/6 (நத்தம் நிலவரி திட்ட புதிய புல எண்.276/17) நத்தம் பூரா ஹெக்டேர் 0.00.83 ஏர்ஸ்க்கு 83 சதுர மீட்டர் மனையும், அதில் கதவிலக்கம் 113 (பழைய எண்.62) உள்ள ஒரு கீற்று கூரை வீடும், அதில் உள்ள பஞ்சாயத்து குடிநீர் இணைப்பு-1, மற்றும் அதன் வரிவிதிப்பு, மின் இணைப்பு, மீட்டர், மீட்டர் டெப்பாசிட் உள்படவும் சுவாமிமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 27.01.2021 ஆம் தேதி செட்டில்மெண்ட் பத்திரம் எண்.201/2021 ன் படி பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள இடத்தை எனது மனைவி நாகவள்ளி பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு கடந்த 22.06.2024 ஆம் தேதி கும்பகோணத்தில் உள்ள இ-சேவை மையத்தில் இணையவழி பட்டா மாறுதலுக்காக விண்ணப்பம் செய்திருந்தேன். அதன்படி 26.06.2024 ஆம் தேதி இன்னம்பூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.மதியழகன் என்பவரை காலை சுமார் 11 மணியளவில் அவரது ஆபிசில் நேரில் சந்தித்து இணையவழி பட்டா

மாறுதலுக்கான விண்ணப்ப ஒப்புகைச் சீட்டினை காண்பித்தேன். அப்போது VAO பத்திர நகலை கேட்டதால் நான் ஒரு காப்பி கொடுத்தேன். அப்போது அவர் பட்டா மாறுதலுக்கு சிபாரிசு செய்வதற்கு ரூ.5000/- செலவாகும், ஒரு வாரம் கழிச்சு வந்து பாருங்க என்று சொன்னார். பிறகு நான் 08.07.2024 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் VAO மதியழகனை அவரது ஆபிசில் நேரில் பார்த்தேன். அப்போது அவர் உங்களுக்கு முன்னாடி 5 நபர்களுக்கு பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் வந்துள்ளது, அதனை முடிச்ச பிறகு உங்களுக்கு செய்து தரேன், நீங்க நான்கு நாள் கழிச்சு வந்து பாருங்க, வரும் போது நான் கேட்ட பணம் ரூ.5000/-த்தை எடுத்துட்டு வாங்கனு சொன்னார். சார் பார்த்து செய்யுங்க என்று சொன்னேன், அதற்கு அவர் சரி, 3000/- பணத்தோடு நான்கு நாள் கழிச்சு வாங்க என்று கறாராக சொன்னார். அதற்கு நான் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன். பின்னர் 15.07.2024 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு VAO மதியழகனுக்கு போன் செய்து, பட்டா சம்மந்தமாக கேட்டேன், அதற்கு அவர், நான் இரண்டு நாள் கழித்து கூப்பிடுகிறேன் என்று சொன்னார். பின்னர் நேற்று மதியம் சுமார் 03.00 மணிக்கு என் மகன் மதன், எனக்கு போன் செய்து, பட்டா சம்மந்தமாக VAO பேச சொன்னதாக சொன்னார். நான் சிறிது நேரம் கழித்து VAO மதியழகனுக்கு போன் செய்தேன். அப்போது அவர் என்னிடம் விண்ணப்பத்தில் இருந்த செல்போன் பார்த்து, எனது மகனுக்கு பேசியதாகவும், டவுன் பக்கம் வருவதாக இருந்தால் உடனே வாங்க என்று சொன்னார். அதற்கு நான் வெளியில் உள்ளேன், நாளைக்கு வருகிறேன் என்று சொன்னேன், அதற்கு சரிங்க சார் என்று சொன்னார். எனக்கு VAO மதியழகன் கேட்ட லஞ்ச பணம் 3000/-த்தினை கொடுக்க விருப்பமில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாததால் என் பட்டறையில் வேலை பார்க்கும் ரமேஷ் என்பவர் மூலம் நான் சொல்ல சொல்ல எழுதிய புகார் மனுவை அவரால் படிக்க கேட்டு அது சரியாக இருந்தது. அந்த மனுவை இன்று 18.07.2024 ஆம் தேதி மாலை 07.00 மணிக்கு நேரில் வந்து புகார் கொடுக்கிறேன். எனது மனைவி பெயரில் பட்டா மாறுதலுக்கு சிபாரிசு செய்ய லஞ்சம் கேட்ட VAO மதியழகன் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் பத்திர நகல் மற்றும் இணையவழி பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் செய்த

ஒப்புகைச்சீட்டின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd- க.மாரியப்பன் Tr.R.Arunprasad, Inspector of Police, V&AC, Thanjavur is instructed to verify the content of the petition and the reputation of the suspect officer and proceed further as per law S/d B.V.Nandagopal, 18.07.2024 ஐயா/அம்மா, மேற்படி புகாரைப் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவு படி பெற்று, புகாரின் உண்மைத்தன்மையை உறுதி செய்தும், புகாரின்பேரில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 02/2024 U/s 7 of Prevention of corruption Act (as amended in 2018)-ன்படி 19.07.2024 ஆம் தேதி 08.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (ஒப்பம்).R.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு தஞ்சாவூர், அம்மா, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவைகளை கனம் கும்பகோணம் தலைமை குற்றவியல் நடுவர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் நகல் ஒன்று அலுவலக கோப்பில் விசாரணைக்கும் வைத்தேன்.

R. Arunprasad
19/7/2024

Inspector of Police,
V&AC, Thanjavur.